

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 274 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – வைகாசி 01 – வியாழக்கிழமை 15 மே 2025 – சென்னை 28 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 274 : Thiruvalluvar Year - 2056 - Vaikasi 01 - Thursday 15 May 2025 - Chennai 28 Pages ₹ 5.00




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.5.2025) நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு நேரில் சென்று மருத்துவப் பணியாளர்களின் வருகை பதிவேடுகள், மருந்து இருப்பு பதிவேடுகள் போன்றவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரூ, நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மருத்துவர் எம்.கீதாஞ்சலி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (14.5.2025) நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரிக்கு நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, மருத்துவக் கல்லூரி மாணவர்களுடன் கலந்துரையாடி, அவர்களது தேவைகள் குறித்து கேட்டறிந்தார். இந்நிகழ்வின்போது, நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.ராசா, அரசு தலைமைக் கொறடா கா.ராமச்சந்திரன், நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரூ, நீலகிரி அரசு மருத்துவக் கல்லூரி முதல்வர் மருத்துவர் எம். கீதாஞ்சலி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

## பொள்ளாச்சி சம்பவம்: நீதிமன்றம் உத்தரவிட்ட தொகைக்கும் கூடுதலாக

# பாதிக்கப்பட்ட பெண்களுக்கு தலா ரூ.25 லட்சம் நிவாரணம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் உத்தரவு!

**சென்னை,மே.15-**

**பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை குற்றச்செயலில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதிமன்றம் உத்தரவிட்ட தொகைக்கும் கூடுதலாக ஒவ்வொரு பாதிக்கப்பட்ட பெண்களுக்கும் தலா ரூ. 25 லட்சம் நிவாரணத்தொகை உயர்த்தி வழங்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவு பிறப்பித்துள்ளார்.**

**இதுகுறித்து வெளியான அரசு செய்திக் குறிப்பு வருமாறு:**

2019 ஆண்டு நடைபெற்ற பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவம் தமிழ்நாட்டு மக்களிடையே கடும் அதிர்ச்சியை உண்டாக்கியது. தமிழ்நாட்டில் பெண்களுக்கு எதிராக நிகழ்ந்த மிகக்கொடுமையான குற்ற சம்பவமாக கருதப்படும் இந்த வழக்கை விசாரணை செய்த கோயம்புத்தூர் மகளிர் நீதிமன்றம் சமீபத்தில் வழங்கிய தீர்ப்பு பொதுமக்களிடையே நல்ல வரவேற்பினைப் பெற்றது. இந்த கொடுஞ்செயல்களில் ஈடுபட்ட குற்றவாளிகள் 9 பேருக்கும் சாகும் வரை ஆயுள் தண்டனை என வழங்கப்பட்டுள்ள கடுமையான தண்டனை குற்றசெயலில் ஈடுபட முனைவோருக்கு ஒரு கடுமையான எச்சரிக்கையாக இருக்கும்.

தற்போது தமிழ்நாட்டில் பெண்களுக்கு பாதுகாப்பான சூழலை உருவாக்கி பெண்களுக்கு பல்வேறு வகைகளிலும் அதிகாரம் அளித்திட தமிழ்நாடு அரசு சிறந்த முயற்சிகளை எடுத்துள்ளது. தமிழ்நாடு அரசு செயல்படுத்தும் தோழி விடுதிகள், புதுமைப் பெண், நான் முதல்வன் போன்ற முன்னோடி திட்டங்களின் விளைவாக மாநிலத்தில் பள்ளிகள் மற்றும் கல்லூரிகள் இரண்டிலும் மாணவிகளின் சேர்க்கை அதிகரித்து உள்ளது. இந்தியா முழுவதும் உள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் பெண்களில் 41 சதவீதம் பேர் இம்மாநிலத்தில் பணி



புரிகின்றனர்.

பெண்களின் பாதுகாப்பிற்கு அரணாகத் திகழக்கூடிய திராவிட மாடல் அரசு, பெண்களுக்கு எதிராகக் குற்றச் செயலில் ஈடுபடுவதற்கு அஞ்சிடும் வகையில் பெண்களுக்குத் துன்பம் விளைவித்தலை தடை செய்கின்ற சட்டத்தை சமீபத்தில் திருத்தம் செய்து குற்றச்செயல்களுக்கான தண்டனையை மிகவும் கடுமையாக்கியுள்ளது. மேலும், இந்திய தண்டனைச் சட்டத்திலும் பெண்களுக்கு எதிரான தண்டனையை கடுமையாக்கும் விதமாக உரிய சட்டத்திருத்தத்தினை சமீபத்தில் நடைபெற்ற சட்டமன்ற கூட்டத் தொடரில் நிறைவேற்றி ஒன்றிய அரசின் ஒப்புதலுக்காக தமிழ்நாடு அரசு அனுப்பி வைத்துள்ளது. இதனால், குற்றவாளிகள் தங்கள் குற்றங்களுக்கு கடுமையான விளைவுகளை எதிர் கொள்ள நேரிடும்.

இவ்வழக்கில் கடந்த 13.05.2025 அன்று கோயம்புத்தூர் மகளிர் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு மொத்தமாக ரூ.85 லட்சம் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்தவழக்கில் பாதிக்கப்பட்ட பெண்கள் தைரியமாக முன்வந்து புகார் அளித்தது மட்டுமல்லாமல் நீதிமன்ற விசாரணைக் குழு ஒத்துழைப்பும் அளித்ததன் அடிப்படையிலேயே இந்த வழக்கில் குற்றவாளிகளுக்கு தண்டனை கிடைத்துள்ளது. பாதிக்கப்பட்டவர்களுக்கு நியாயம் கிடைத்துள்ளது. அத்தகைய நியாயத்திற்காக துணிச்சலுடன் போராடிய பெண்களின் தைரியம் பாராட்டுக்குரியது.

அந்த வகையில், நீதிமன்றம் உத்தரவிட்ட மொத்த நிவாரணத் தொகையாகிய ரூ.85 லட்சத்திற்கும் கூடுதலாக, பாதிக்கப்பட்ட பெண்கள் ஒவ்வொருவருக்கும் தலா ரூ.25 லட்சம் என நிவாரணத் தொகையை உயர்த்தி வழங்கிட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவிட்டுள்ளார்.

இவ்வாறு அரசின் செய்திக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

## பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமை வழக்கைப் போன்று

# கொடநாடு கொலையாளிகளுக்கும் தக்க தண்டனை கிடைக்கும்!

## உதகையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் பேட்டி!

**உதகை, மே 15 -**

**“பொள்ளாச்சி வழக்கைப் போன்று கொடநாடு கொலையாளிகளுக்கும் தக்க தண்டனை கிடைக்கும்” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உதகையில் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியுள்ளார்.**

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்தியாளர்கள் சந்திப்பில் கூறியதாவது:

திமுக ஆட்சிக்கு வந்ததும் பொள்ளாச்சி வழக்கில் குற்றவாளிகள் நிச்சயம் தண்டிக்கப்படுவார்கள் என 2019 நாடாளுமன்ற தேர்தல் பரப்புரையின்போதே நான் பேசியிருந்தேன். எப்படிப்பட்ட பொறுப்பில் இருந்தாலும் சரி, எவ்வளவு பெரிய செல்வாக்கு பெற்றிருந்தாலும் சரி.. நிச்சயமாக தண்டிக்கப்படுவார்கள் என்று சொன்னேன். அதுதான் இப்போது நடந்திருக்கிறது. இது தொடர்பாக நடந்து முடிந்த சட்டசபை கூட்டத்தொடரிலும் பொல்லாத ஆட்சிக்கு பொள்ளாச்சியே சாட்சி என நான் கூறினேன். கொடநாடு கொலை கொள்ளை வழக்கிலும் விசாரணை நடைபெற்று வருகிறது. உரிய தண்டனை வழங்கப்படும்.

அ.தி.மு.க. ஆட்சியில் விளையாட்டுத்துறை அமைச்சர் யார் என்பதே தெரியாத நிலைதான் இருந்தது. ஆனால், தற்போது வெளிநாட்டு வீரர்கள் இங்கே வந்து கலந்துகொள்ளும் அளவுக்கு விளையாட்டுக் கட்டமைப்புகள் மேம்படுத்தப்பட்டுள்ளன. அதிமுக ஆட்சியில் விளையாட்டுத்துறை அமைச்சர் யார் என்று கேட்டால் தெரியாது, ஆனால் இப்போது யார் என்று உங்கள் அனைவருக்கும் தெரியும்.

**எடப்பாடியின் பொய் பித்தலாட்டம்!**

ஒன்றிய அமைச்சர் அமித் ஷாவை எதற்காக எடப்பாடி பழனிசாமி சந்தித்தார் என்பது நாட்டுக்கே தெரியும். ஆனால், தான் சொல்லித்தான் மெட்ரோ, 100 நாள் வேலை ஆகிய திட்டங்களுக்கு நிதி ஒதுக்கப்பட்டதாக கூறி வருகிறார். இந்த மாதிரி மோசமான பொய், பித்தலாட்டத்தை சொல்வதுதான் அவரின் வேலையாக இருக்கிறது. இதுவும் தமிழ்நாட்டு மக்களுக்கு நன்றாகவே தெரியும்.

இவ்வாறு முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பேட்டியளித்தார்.